// WORD OF CHRIST

[ கிறிஸ்துவின் வசனம் ]

மரம் 2 — கொலோசெயர் 3:16 — கனி 2

ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன் — II கொரிந்தியர் 3:6 — செப்டம்பர் 1993

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

தொடர்ந்து இவ்விதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். காலம் கடந்துகொண்டே போகிறது. நாம் யாவரும் கர்த்தரின் வருகையை எதிர்பார்த்தவண்ணம் இருக்கவேண்டும். நம்மில் உள்ள கறைகளை அகற்றி தகுதிப் படுத்திக்கொள்வோம். தொடர்ந்து இப்பத்திரிக்கையை வாசித்து பயன்பெறுங்கள்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம் அனைவரோடும்கூட இன்றும் என்றும் சதாகாலமும் இருப்பதாக ஆமென்!

ஆசிரியர்

## THE PREACHING OF THE CROSS

## சிலுவையைப்பற்றிய உபதேசம்

அன்பான தேவ பிள்ளைகளே, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பாடுகள் அடங்கிய சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாய் இருக்கிறது. இரட்சிக்கப் படுகிற நமக்கோ அது தேவபலனாய் இருக்கிறது. I கொ 1:18 ஆம் பிரியமானவர்களே சிலருக்கு இவ்உபதேசம் பைத்தியமாக இருக் கிறது. காரணம் இவ்வுலகத்தில் பிசாசு அவர்களுடைய மனதைக் குருடாக்கி போட்டுவைத்து இருக்கிறான். உங்களையும் என்னை யும் மீட்கவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித் தார். மேலும் நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து, அதை நடுவில் இராதபடிக்கு எடுத்து சிலுவையின் மேல் அடித்து; துரைத்தனங் களையும் அதிகாரங்களையும் உரித்துக்கொண்டு, வெளியரங்க மான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார். கொலோ 2:14, 15 என்று வாசிக்கிறோம்.

நாம் நம்முடைய வாழ்க்கையில் சிலுவையை குறித்தே அல்லாமல் வேறு ஒன்றையும் குறித்து மேன்மை பாராட்டாது இருப்போமாக! ஏன் என்றால் சிலுவையைப் பற்றி உபதேசம் இரட்சிகப்படுகிற நமக்கு அது தேவபலனாய் இருக்கிறது. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாமிசத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள், என்று அப்போஸ்தலனாகிய பவுல் கலா 5:24ல் சொல்லியிருக்கிறார். பிரியமான தேவபிள்ளையே நீங்கள் உங்கள் மாமிசத்தின் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறர்களா? மேலும் பவுல் என்ன சொல்லுகிறார். கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டேன்; ஆயினும் பிழைத்திருக்கிறேன்; இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாமிசத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். கலா 2 : 20 இதை வாசிக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே நமக்காம ஆண்டவராகிய இயேசு சிலுவையில் இரத்தம் சிந்தினார். நீங்கள் அவருக்காக என்ன செய்யப்போகிறீர்கள்? இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி; ஒருவன் என்னை பின்பற்றி வரவிரும்பினால், அவன் தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன். மத் 16:24 ல் சொல்லிய வசனத்திற்கு கீழ்படிந்து செயல்படுங்கள்.

இக்கடைசி நாட்களில் ஒரே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையை பற்றிய உபதேசத்தை குழப்புகிறார்கள். 1 கொ 1 : 12-13ல் சொல்லப்பட்டபடி சிலர் நான் பவுலைச் சேர்ந்தவன் என்றும், நான் அப்போலோவைச் சேர்ந்தவன் என்றும், நான் கேபாவைச் சேர்ந்தவன் என்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவன் என்றும் சொல்கிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காக சிலுவையில் அறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றீர்கள். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து (அப் 20:28) தாம் சொந்த இரத்தத்தை சிந்தி தம்முடைய சபையை சம்பாதித்துக்கொண்டார். அப்படி இருக்கும்போது நீங்கள் வேறு ஒரு நாமத்திற்கு கீழ்படிந்து ஆராதனை செய்வது எப்படி? கிறிஸ்துவின் நாமத்தின் கீழல்லவா இருக்கவேண்டும்? அவருடைய சபையில் அல்லவா இருக்கவேண்டும். நண்பரே நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசிங்கிக்கிறோம். கர்த்தர் தாமே உங்களை வழி நடத்துவாராக ஆமென.

---

★ **சபை செய்திகள்:**

1. 29-8-93 அன்று சகோதரி சின்னத்தாய் அவர்கள் கிறிஸ்துவின் வசனத்திற்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார் இவருக்கு வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபை ஊழியர் சகோ. அர்ச்சுணன் ஞானஸ்நானம் கொடுத்தார்.
2. 16-8-93 அன்று சகோதரி. மாரியம்மாள் அவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து இறந்து விட்டது.
3. வருகிற 26-9-93 ஞாயிற்றுக்கிழமையில் சகோதர, சகோதரிக்கான ஆவிக்குரிய வேதவகுப்புக்ள் நடைபெறும் கலந்து கொண்டு பயன்பெறுங்கள்.

★ **பரிசு**

ஆகஸ்ட் மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்.

1. சகோ. தமிழ்வாணன் - மேல்விஷாபுரம்
2. சகோதரி. மேரி - வத்தலக்குண்டு
3. சகோதரி. கலைவாணி - வத்தலக்குண்டு
4. சிறுமி அனிதா சொக்கலிங்கபுரம்
5. சிறுமி மெர்ஸி வத்தலக்குண்டு

★ **ஆகஸ்ட் மாத இதழின் விடைகள்**

1. தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர் களுக்கு ரோம 8:28
2. ஞானத்தின் நீதி 1:7
3. 147 வருஷம் ஆதி 47:28
4. சமாதானத்திற்கு I கொரி 14:33
5. கள்ள தீர்க்கதரிசிகள் I யோ 4:1
6. கர்த்தருடைய
7. தேவனுடைய
8. கேடகமாக
9. இச்சைகளினால்
10. கூடாது

★ **இம்மாத வேத அறிவுப்போட்டி**

1. உங்கள் வழிகளைச் சிந்தித்துப் பாருங்கள் என்று யார் சொல்வது?
2. நியாயப் பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங்களும் யார் வரைக்கும் வழங்கி வந்தது?
3. எழு வயதில் ராஜாவாகி 40 வருஷம் எருசேலமில் அரசாண்ட புருஷன் யார்?
4. கிறிஸ்து எதன் முடிவாயிருக்கிறார்?
5. சிலுவையைப் பற்றிய உபதேசம் யாருக்கு பைத்தியமாக இருக்கிறது?

---

ஜீவ அப்பம் நானே (இயேசு) யோவான் 6:48

---

6. நமக்கு பிரதான ஆசாரியர் யார்?
7. எது சகல பாவங்களையும் மூடும்?
8. 300 பேருடன் மீதியானியரை ஜெயித்த வீரன் யார்?
9. நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூட என்ன செய்தும் இருப்போம்?
10 எருசலேம் துவக்கி இல்லிரிக்கம் தேசம் வரை சுவிசேஷம் சொன்னது யார்?

மேற்கண்ட கேள்விகளில் முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும்.

★ இம்மாத சிறுவர் வேத அறிவுப்போட்டி (12 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு மட்டும்)

1. உம்மை............ மாட்டேன் என்றான்.
2. இயேசுவோ ............... என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்
3. உன் தகப்பனையும்.. ............ .. ... கனம் பண்ணுவாயாக.
4. மனந்திரும்பிப் .................. ஆகாவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டீர்கள்.
5. உங்கள் தலையிலுள்ள ...................... .... எண்ணப்பட்டிருக்கிறது

மத்தேயு எழுதின சுவிசேஷத்திலிருந்து கேள்விகள் கேட்கப்பட்டு உள்ளன.

படித்து வேத வசன ஆதாரத்தோடு, பதில் இம்மாத இறுதிக்குள் ஒரு 15 பைசா போஸ்ட்டு கார்டில் எழுதி எமக்கு அனுப்பவும் பரிசு அனுப்பப்படும்.

ஆசிரியர்

★ தேவை

கிறிஸ்துவின் சபையில் ஊழியராக இருக்கும் சகோ, மைக்கேல் செல்லதுரை என்ற வாலிப சகோதரனுக்கு ஆவிக்குரிய மணப்பெண் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**★ தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள விருப்பமா?**

கீழ்கண்ட முகவரியில் கலந்துகொண்டு தொழுதுகொள்ளுங்கள்.

**கிறிஸ்துவின் சபை:** **ஞாயிறு ஆராதனை நேரம்:**
கணவாய்ப்பட்டி ரோடு, காலை : 8-30 மணி
தண்ணீர் டேங்க் சமீபம் வத்தலக்குண்டு-624 202

() இலவசம் இப்பத்திரிக்கை இலவசம். விற்பனைக்கு அல்ல ஆசிரியர்

If Undelivered Please Return To:
**THE EDITOR**
**Word of Christ, Post Box No. 5**
**BATLAGUNDU - 624 202 Anna Dt.**

**For Private Circulation only.**

Puplished by Batlagundu church of Christ and
Printed at Shanthi Printers Batlagundu.